நினைவு நல்லது வேண்டும் சிறுகதை தொகுதிக்கான இரசனைக் குறிப்பு

Written by - வெலிகம ரிம்ஸா முஹம்மத்-
Sunday, 20 October 2013 17:56 - Last Updated Sunday, 20 October 2013 18:15

ஜீவநதியின் 28 ஆவது வெளியீடாக மலர்ந்திருக்கிறது ப. விஷ்ணுவர்த்தினி எழுதிய நினைவு நல்லது வேண்டும் என்ற சிறுகதைத் தொகுதி. 93 பக்கங்களில் வெளிவந்துள்ள இந்நூலில் 12 சிறுகதைகள் இதில் உள்ளடங்கியிருக்கின்றன. அருள் திரு இராசேந்திரம் ஸ்ரலின் அவர்களின் வாழ்த்துச் செய்தியோடு, வி. ஜீவகுமாரனின் முன்னுரையும் இத்தொகுதியை அலங்கரிக்கின்றன எனலாம். இது நூலாசிரியரின் இரண்டாவது சிறுகதைத் தொகுதியாகும். இவர் ஏற்கனவே 2010 இல் மனதில் உறுதி வேண்டும் என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார். நினைவு நல்லது வேண்டும் என்ற சிறுகதைத் தொகுதி போரின் கொடுமைகள், மக்கள் அதனால் பட்ட அவதிகள், யுத்தம் அழித்துச் சென்ற செல்வங்கள் போன்ற பலதரப்பட்ட விடயங்கள் சம்பந்தப்படுத்தி எழுதப்பட்டிருப்பதானது, போர் மக்களின் மனதில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதை நன்கு உணரக்கூடியதாக இருக்கின்றது. எத்தனை ஆயிரம் உயிர்கள் இந்த போரின் போது இறந்தன? எத்தனை நபர்கள் காணாமல் போயுள்ளனர்? என்ற அடிப்படைக் கேள்விகளுக்கு விடையே இல்லாத சூழலில் இந்தத் தொகுதியானது சிலருக்கு, சிறந்த ஆறுதலாகக்கூட இருக்கலாம் என்ற அளவுக்கு அதில் சித்தரிக்கப்பட்டுள்ள விடயங்கள் மனதைக் கவர்கின்றன.

சொந்தமில்லா பந்தங்கள் (பக்கம் 01) என்ற முதல் கதையின் தலைப்பே கதையை சொல்லிவிடுகின்றது. எந்த விதத்திலும் இரத்த சொந்தமே இல்லாத பிள்ளைகள் ஒரு பெண்மணியிடம் தஞ்சம் புகுகின்றன. அரக்கப்பரக்க அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் சாப்பிடுவதைக் கண்டு அப்பெண்ணின் இதயம் மிகவும் துன்பப்படுகின்றது. முகாமில் வாழ்ந்த அந்தப் பெண்ணுக்கு மீண்டும் தன் சொந்த இடத்தில் குடியேறுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. அவளுடன் இருக்கும் இந்த மூன்று குழந்தைகளையும் அவள் அழைத்துப் போகலாம். ஆனாலும் தனக்கு ஏதாவது நடந்தால் இந்தக் குழந்தைகளின் கதி என்ன என்று சிந்திக்கும் அவள் மூன்றாவது குழந்தையை மாத்திரம் தூக்கிக் கொண்டு மற்ற பிள்ளைகளிடமிருந்து துன்பத்துடன் விடைபெறுகிறாள். மற்ற இருவரும் அந்த அம்மம்மாவை குத்திட்டுப் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இதுதான் கதையின் பிரதான அம்சம்.

`யாரை நொந்து என்ன பயன்? எல்லாம் என் தலைவிதி.

தலைவிதி என்றால் அதை ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் சேர்த்துத்தான் இறைவன் எழுதுவானோ?

1 / 4

நினைவு நல்லது வேண்டும் சிறுகதை தொகுதிக்கான இரசனைக் குறிப்பு

Written by - வெலிகம ரிம்ஸா முஹம்மத்-
Sunday, 20 October 2013 17:56 - Last Updated Sunday, 20 October 2013 18:15

இந்த முட்கம்பி வேலிக்குள் சிறைப்பட்டிருக்கும் அனைவருக்குமே ஒரே தலையெழுத்து தானோ?' என்று இந்தக் கதையின் தொடக்கத்தில் கதாசிரியர் எழுதியிருக்கும் வரிகள் வலியை சுமந்து நிற்கின்றன.

திருப்பம் (பக்கம் 09) என்ற கதை கணவனை இழந்த பெண்ணின் சோகத்தை சொல்லி நிற்கின்றது. சந்திரமதி என்ற பெண்ணின் கணவன் அவளது கண் முன்னிலையிலேயே இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரைவிட்ட பின் அவளது வாழ்வு எப்படி பிரச்சனைகளுடன் கழிகிறது என்பதை அழகாக எழுதியுள்ளார் கதையாசிரியர். முகாமிலிருந்து வெளியேறிய பிறகு ஊறுகாய் போத்தல் விற்று தன் வருமானத்தைப் பார்க்கிறாள் அந்தப் பெண்.

ஒரு ஆண் துணையுமின்றி சைக்கிளில் அவள் போய் அவற்றை விற்பனை செய்வதைக் கண்டு சந்திரமதியின் தாயின் உள்ளம் தவிக்கிறது. சந்திரமதிக்கு மறுமணம் செய்து வைக்க முனைகிறாள் அந்தத் தாய். ஆனாலும் சந்திரமதியின் மனது அதற்கு இடம்கொடுக்கவில்லை. அவளது கணவனோடு அவள் வாழ்ந்த நாட்களை அவள் இன்னும் மறக்கவில்லை. ஆதலால் மறுமணம் என்ற பேச்சையே பேச வேண்டாம் எனத் தாய்க்கு உறுதியுடன் கூறுகிறாள். எனினும் அவளை குறிவைத்த பல கண்களை அவள் தினமும் காண்கிறாள். அவர்களிடமிருந்து தப்பித்து தன் மூன்று குழந்தைகளையும் அவள் இனி எப்படி வளர்ப்பாள்? என்ற கேள்வி வாசகருக்கு எழுகின்றது. ஆனாலும் அந்த வாழ்க்கையை எதிர்கொள்ளத் தயாராய் அவள் துணிவுடன் செயற்படுகிறாள் என்பது பெரும் ஆறுதலைத் தருகின்றது.

நினைவு நல்லது வேண்டும் (பக்கம் 17) என்ற மகுடக் கதையானது சாந்தினி என்ற பெண்ணுக்கு நேர்ந்த சோகத்தை எடுத்தியம்புகின்றது. அவளது கழுத்தில் பட்ட ஷெல் துண்டொன்று காலப்போக்கில் அவளுக்கு தாங்க முடியாத வலியைக் கொடுக்கின்றது. கொழும்புக்குப் போய்த்தான், அதற்குரிய அறுவை சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும் என்று அவளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. அதற்காக அவளிடம் செலவுக்குப் பணமுமில்லை. போய் வருவதற்கான துணையுமில்லை. அதனால் தமக்கென்றிருக்கும் காணியை விற்று தேவையான பணத்தை எடுத்துக்கொண்டு சாந்தினியும், அவளது தாயும் கொழும்புக்கு வருகின்றனர். ஆனால் மொழிப் பிரச்சனையும், ஆட்களைத் தெரியாத பயமும் அவர்களை ஆட்கொள்கிறது. இறுதியில் ஒருவாறு வைத்தியசாலையை அடைந்து சாந்தினி அங்கே அனுமதிக்கப்படுகின்றாள். அங்கு தாதியாக தொழில் புரியும் ஒரு சிங்களப் பெண் மற்றவர்களை விழுந்து விழுந்து கவனித்தாலும், சாந்தினியைக் கண்டதும் கடுகடுப்பாகவே பேசுகிறாள். சாந்தினிக்கு இதுவொரு பெரும் மனக்குழப்பத்தைக் கொடுக்கின்றது.

அதாவது அந்தத் தாதியின் கணவன் யுத்த பூமியில் இறந்துவிட்டான். அந்த

2 / 4

கரோபத ்தயைே அவள ் சாந ்தினிக ்கு காட ்டுகிறாள ் என ்று அறிந ்தபோது மிகவும ் வரு த ்தப ்படுகிறாள ் சாந ்தினி. சாந ்தினியும ் தன ் இரு தம ்பிகளை யு த ்தத ்தில ் இழந ்தவள ்தான ் என ்று அந ்தத ் தாதி பின ்பு அறிகின ்றாள ். அதற ்குப ்பிறகு அவர ்களுக ்குள ் ஒற ்றுமை உண ்டாகின ்றது என ்பதயைும ், யார ் யாரோ சயெ ்த தவறுகள ் யார ் யாரயைலெ ்லாமோ பாதிக ்கின ்றது என ்ற உண ்மயையைும ் இக ்கதை உணர ்த ்தி நிற ்கின ்றது.

விழித ்திரு (பக ்கம ் 63) என ்ற கதை பிரு ந ்தா என ்ற ஒரு சிறுமிக ்கு நரே ்ந ்த பாலியல ் வல ்லுறவு பற ்றிச ் சொல ்லுகின ்றது. தனது தந ்தை இறந ்தவுடன ், தனது தாயான மாலினியை திருமணம ் சயெ ்து கொள ்வதால ் பிரு ந ்தா என ்ற ஒரு சிறுமிக ்கு சித ்தப ்பாவாகின ்றார ் சிவநசேன ். இவர ் ஆரம ்பத ்திலயேே போரினால ் ஒரு காலை இழந ்தவர ். அதனால ் வளெியில ் சன்று வலேை சயெ ்ய முடியாது என ்பதால ் வீ ட ்டிலயேே தங ்காய ் வியாபாரம ் சயெ ்து வருகின ்றார ். மாலினியும ் த ர இடத ்துக ்கு க லி வலேைக ்கு சலெ ்வதால ் கணவனின ் பொறுப ்பிலயேே பிள ்ளகைளை விட ்டுச ் சலெ ்வது வழக ்கம ். முதலில ் எந ்தவித சலனங ்களும ் இல ்லாதிருந ்தபோதும ், பிரு ந ்தா பதின ்ம ன ்று வயதில ் பருவமடைந ்த பின ்பு சிவநசேனின ் நடவடிக ்கைகள ் மாறிப ் போகின ்றது. சொந ்தத ் தகப ்பன ்களே இக ்காலத ்தில ் பிள ்ளகைளை வடே ்டையாடும ்போது சித ்தப ்பா எம ்மாத ்திரம ் ? வலேியே பயிரை மயே ்கின ்றது.

இது பற ்றி தாயிடம ் சொன ்னால ் கொன ்று விடுவனே ் என ்று மிரட ்டுகின ்றான ் சித ்தப ்பன ். சில நாட ்களுக ்குள ் தனது மகள ் கர ்ப ்பமான விடயத ்தை மாலினி அறிந ்து துடிக ்கின ்றாள ். பின ்பு இரவு முழுவதும ் யோசித ்துவிட ்டு பிரு ந ்தாவின ் கருவகைக ் கலபை ்பதற ்காக மாலினி பிரு ந ்தாவை அழதை ்துச ் சலெ ்கின ்றாள ். தனக ்கு என ்ன நடந ்தது? ஏன ் தாய ் இங ்கே அழதை ்து வந ்தாள ் என ்றுகூட தரெியாமல ் பிரு ந ்தா யோசிக ்கின ்றாள ். அவ ்விடத ்தில ் பப ்பாசிக ்குழாய ், சகை ்கிள ் சில ்லுக ்கம ்பி ஆகியவற ்றின ் மலம ் மட ்டத ்தனமான வதை ்திய முறை நடக ்கின ்றது. சிறிது நரேத ்தில ் பிரு ந ்தா என ்ற சின ்னப ் ப இறந ்துவிடுகின ்றது.

போர ் தந ்துவிட ்டுப ் போன காயங ்கள ் ஏராளம ். அவற ்றை சொல ்லில ் வடிக ்க முடியாது. ஆனாலும ் சம கம ் எதிர ்கொண ்ட சோகங ்களை தன ் பனோவால ் கதயைாக ்கித ் தந ்திருக ்கும ் ப. விஷ ்ணுவர ்தினி பாராட ்டப ்பட வணே ்டியவர ். அவருக ்கு எனது வாழ ்த ்துக ்கள ் !!!

ந லின ் பயெர ் - நினவைு நல ்லது வணே ்டும ்
ந லின ் வகை - சிறுகதை
ந லாசிரியர ் - ப. விஷ ்ணுவர ்த ்தினி
விலை - 250 ர பாய ்
வளெியீ ட ு - ஜீ வநதி வளெியீ ட ு

நினைவு நல்லது வேண்டும் சிறுகதை தொகுதிக்கான இரசனைக் குறிப்பு

Written by - வெலிகம ரிம்ஸா முஹம்மத்-
Sunday, 20 October 2013 17:56 - Last Updated Sunday, 20 October 2013 18:15

poetrimza@gmail.com

4 / 4